# 2

# வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும்

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## 11ம் ஆண்டு

## முகாமைத்துவம்

**பகுதி 1**

பின்வரும் வினாக்களில் (1), (2), (3), (4) என தரப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகவும் பொருத்தமான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.

கீழே X நிரலில் முகாமைத்துவ கருமங்களும் மற்றும் Y நிரலில் முகாமைத்துவ கருமங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகளும் கீழே உள்ளன.

| X | Y |
|---|---|
| I. திட்டமிடல் | A. பொருத்தமான அதிகாரிகளை நியமித்தல் |
| II. ஒழுங்கமைத்தல் | B. வணிகச் செயற்பாடுகள் சரியாக நடைபெறுகின்றதா என ஆய்வு செய்தல். |
| III. நெறிப்பாடுகள் | C. வணிக தினத்திற்கு நாடகம் ஒன்று நடாத்த முடிவு செய்தல். |
| IV . கட்டுப்படுத்தல் | D. அதிகாரிகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுதல் மற்றும் ஆலோசனை செய்தல் |

1. மேலே X நிரலில் முகாமைத்துவ கருமங்களுடன் Y நிரலில் உள்ள முகாமைத்துவ கருமங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகளையும் ஒழுங்குமுறையில் காட்டும் விடை.

1) A, B, C மற்றும் D

2) C , A , D மற்றும் B

3) B , A , C மற்றும் D

4) C , D , A மற்றும் B

Commerce and Business Studies Branch

2. ஆடைத் தொழிற்சாலையை நடாத்தும் நிமாலியினால் பின்வரும் செயற்பாடுகள் உமக்கு தரப்படுகின்றது.

A - மூலப்பொருள், ஊழியர்கள் மற்றும் முகாமையாளர்களின் அளவை தீர்மானித்தல்.

B – தாம் திட்டமிட்டபடி தையல் செயற்பாடுகள் நடைபெறுகிறதா என்பதை பரிசோதித்தல்.

C - ஊழியர்கள் மற்றும் முகாமையாளர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குதல்.

D - ஊழியர்கள் மற்றும் முகாமையாளர்களுக்கு தேவையான வளங்களை வழங்குதல்.

மேலே உள்ள தகவல்களுடன் பொருந்தக்கூடிய முகாமைத்துவ கருமங்களை ஒழுங்குமுறையில் காட்டும் விடை

1) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்

2) ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்துதல், நெறிப்படுத்தல், திட்டமிடுதல்

3) திட்டமிடல், கட்டுப்படுத்துதல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல்

4) திட்டமிடல் , கட்டுப்படுத்துதல் , நெறிப்படுத்தல், ஒழுங்கமைத்தல்

3. பின்வரும் சம்பவத்தை அடிப்படையாக கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

மரக்கறிகள் கடை ஒன்றை நடாத்தி வரும் சஹ்றான், 10 காய்கறிகள் கொண்ட ஒரு பொதியை வாடிக்கையாளர்களுக்கு ரூ.500க்கு விற்க முடிவு செய்தார். குறித்த மரக்கறிகள் பொதி விற்பனை ஒழுங்காக நடைபெறுகின்றதா என்பதை தேடி பார்க்க ஊழியர் ஒருவரையும் நியமித்தார்.

மேற்கண்ட சம்பவத்தில் சம்பந்தப்பட்ட முகாமைத்துவ செயற்பாடுகள்,

1) வடிவமைப்பு, ஒழுங்கமைப்பு

2) ஒழுங்கமைப்பு , கட்டுப்படுத்தல்

3) திட்டமிடல், கட்டுப்படுத்தல்.

4) திட்டமிடல், நெறிப்படுத்தல்

4. நிறுவனம் ஒன்றிக்கு ஊழியர்களை நியமித்தல் மற்றும் நிறுவனத்தின் ஊழியர்களுக்கு என அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை வழங்குதல (1) ...............: எனவும் மற்றும் அந்த ஊழியர்கள் செய்ய வேண்டிய கடமைகளுக்கு அவர்களை வழிநடத்துதல் (2 ) .................. என்று அழைக்கப்படுகிறது. மேலே உள்ள (1) மற்றும் (2) இடைவெளிகளுக்கான பொருத்தமான பதில்,

1) திட்டமிடல் மற்றும் ஒழுங்கமைத்தல்

2) ஒழுங்கமைத்தல் மற்றும் இயக்குதல்

3) திட்டமிடல் மற்றும் இயக்குதல்

4) திட்டமிடல் மற்றும் கட்டுப்படுத்தல்

Commerce and Business Studies Branch

5. ஒரு வணிகத்தின் நோக்கங்களைத் தீர்மானித்தல் மற்றும் நோக்கங்களை அடைவதற்கு தகுந்த நடவடிக்கை எடுப்பது,

1) திட்டமிடல்

2) ஒழுங்கமைத்தல்

3) நெறிப்படுத்தல்

4) கட்டுப்படுத்தல்

6. ஒரு வணிக நிறுவனத்தின் மனித வளங்களை முகமை செய்யும் செயல்பாடு எந்த முகாமைத்துவ செயற்பாட்டிகுள் உள்ளடங்கும்?

1) திட்டமிடல்

2) ஒழுங்கமைத்தல்

3) நெறிப்படுத்தல்

4) கட்டுப்படுத்தல்

## பகுதி 11

பின்வரும் கூற்றுகள் உண்மையா பொய்யா என்பதைக் குறிப்பிடவும்.

1. வரையறையற்ற மனித தேவைகள் தொடர்பாக கிடைக்கும் வளங்கள் எல்லையற்றவை. ......................

2. ஒரு வணிகத்தின் நோக்கம் திட்டமிட்ட இலக்குகளை அடைவது உற்பத்தித்திறன் எனப்படும். ......................

3. மிகக்குறைந்த அளவு வளங்களைப் பயன்படுத்தி கூடிய வெளியீட்டை பெறுவது முகாமைத்துவம் ஆகும். ......................

4. முகாமைத்துவ என்பது 04 செயல்பாடுகளைக் கொண்ட ஒரு செயல்முறையாகும். ......................

5. ஒரு வணிகத்தின் வெற்றி அல்லது தோல்வி என்பது வணிக முகாமைத்துவ செயல்முறை எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பொறுத்து. அமையும் ......................

6. ஒழுங்கமைத்தல் என்பது நல்ல தொழில்முறை உறவுகள் மூலம் தங்கள் கடமைகளைச் செய்ய ஊழியர்களை ஊக்குவிக்கிறது. ......................

7. ஒரு வணிகத்தின் குறைபாடுகளைத் தவிர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பதே கட்டுப்பாடு எனும் முகாமைத்துவ செயல்பாடு ஆகும். ......................

Commerce and Business Studies Branch

8. தேவையான வளங்கள் மற்றும் பணியாளர்களைத் தீர்மானித்தல் ஒழுங்கமைப்ப அகும். ......................

9. முகாமையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் தகவல்களை வழங்குவதன் நெறிப்படுத்தல் ஆகும் ......................

10. முகாமைத்துவ செயற்பாட்டில் திட்டமிடல் என்பது மிக முக்கியமான முகாமைத்துவ செயற்பாடு ஆகும். ......................

## பகுதி 111

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. முகாமைத்துவம் என்றால் என்ன?

2. ஒரு வணிகத்திற்கு முகாமைத்துவ கருத்து ஏன் தேவைப்படுகிறது?

3. உற்பத்தித்திறன் என்றால் என்ன?

4. வினைதிறன் என்றால் என்ன?

5. முகாமைத்துவ கருமங்கள் எவை?

6. நீங்கள் மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு முகாமைத்துவ பணிகளையும் விளக்கவும்.

7. கேக் தயாரிப்பு நிறுவனத்தின் தயாரிப்பு முகாமையாளரால் செய்யப்படும் சில பணிகள் கீழே உள்ளன.

A. கேக் தயாரிப்பு மற்றும் பல்வேறு வகையான கேக்குகளை வடிவமைப்பதில் பணியாளர்களுக்கு அறிவுறுத்தல் தகவல்களை வழங்குதல்.

B. தற்போதைய தொற்றுநோய் சூழ்நிலையின் காரணமாக வாங்குபவர்களைத் தக்கவைத்துக்கொள்ள வாங்குபவர்களின் வீடுகளுக்கு கேக் டெலிவரி சேவையைத் தொடங்க முடிவு செய்தல்.

C. வீடுகளுக்கு கேக்குகளை வழங்க இரண்டு புதிய மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்தல்.

D. வீடுகளுக்கு கேக் விநியோகம் வெற்றி குறித்து ஆய்வு செய்து அறிக்கை தயாரித்தல்.

மேலே உள்ள செயற்பாடுகள் எந்த நிர்வாகச் செயல்பாட்டைச் சேர்ந்தவை என்பதை எழுதுங்கள்.

**8**. கோவிட் 19 நோயால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளை கிருமி நீக்கம் செய்வதற்கான வியாபாரத்தை அமித் தொடங்கினார், மேலும் அவரது நோக்கம் வீடுகளை முறையாக சுத்தம் செய்து அதில் நல்ல இலாபம் ஈட்டுவதாகும். அவர்கள் புறக்கோட்டையில் உள்ள ஒரு கடையில் கிருமிநாசினி கருவிகள், கிருமிநாசினி திரவம் கொள்வனவு செய்ததுடன் 5 ஊழியர்கள் பணியமர்த்தப்பட்டனர். அவர்களின்

Commerce and Business Studies Branch

செயற்பாடுகளைக் கண்காணிக்க ஒரு மேற்பார்வையாளர் நியமிக்கப்பட்டார். இந்த வேலையை எப்படி செய்வது என்று அமித் அனைவருக்கும் அறிவுரை கூறினார். பின்னர் அமித் அவர்கள் பணியாற்றிய இடங்களுக்குச் சென்று பணிகள் முறையாக நடந்துள்ளதா என ஆய்வு செய்தார்.

I. மேலே குறிப்பிட்டுள்ள வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்வாகப் பணிகளுக்குப் பெயரிட்டு, வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பணிக்கும் தொடர்புடைய உதாரணங்களை எழுதுக.

Commerce and Business Studies Branch